தான் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். மத்திய சர்க்கார் என்ன விலை நிர்ணயிக்கப்போகிறார்கள் என்பது தெரியவில்லை, அதுபற்றி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது, அவ்வளவுதான். அவர்கள் என்ன நிர்ணயிக்கிறார்களோ அதை வாங்கிக்கொடுப்பதற்கு நம்முடைய அரசும் முயற்சிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Thiru V. Krishnamoorthi rose)

MR. DEPUTY SPEAKER: The hon. Member may resume his seat.

இரண்டு அமைச்சர்கள் விரிவாகப் பதில் சொல்லிவிட்ட காரணத்தினால் மேலும் துணை வினாக்கள் அனுமதிக்கப்படவில்லை.

எலுமிச்சை சாகுபடி

* 202 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

எலுமிச்சை சாகுபடியினை தீவிரப்படுத்த அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : பழ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எலுமிச்சை, கொடி எலுமிச்சை முதலிய பழப் பயிர்களின் சாகுபடியினைத் தீவிரப்படுத்த கடன் வழங்கப்படுகிறது. புதியதாக சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ. 300 வீதம் கடன் அளிக்கப்படுகிறது. இந்த 300 ரூபாயில் ரூ. 150 ரொக்கமாகவும் ரூ. 150 பழச்செடியாகவும் வழங்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த எலுமிச்சை சாகுபடி தமிழகத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது என்பதனையும், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி ஆகிறது என்பதனையும், அதற்கு அரசு ஆக்கம் அளித்து வருகிற நிலையினையும் விளக்கிக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 550 ஹெக்டேர்களில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக தமிழகத்தில் 4,940 ஹெக்டேர்களில் இந்த எலுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பு பற்றி ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மத்திய சர்க்காரே 73-70 கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியனுப்புகிறார்கள். இப்படி உத்தரவு போடுவது ஒரு விலை, வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது ஒரு விலை என்ற நிலைமை இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் என்ன விலையை நிர்ணயிக்கிறார்களோ அதை வாங்கிக்கொடுப்பதற்கும், கூடுமானல் அதற்குமேலும் வாங்கிக்கொடுக்கவும் முயற்சிக்கத் தயாராக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தங்கலில் சலவைத் துறை

* 203. **வின—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சாத்தூர் வட்டம், திருத்தங்கலில் சலவைத் துறை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருத்தங்கலில் சலவைத் துறை கட்ட ஊராக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பை ஆய்ந்து ரூ. 10,600 மான்யமாகவும், ரூ. 16,600 கடனுகவும் வழங்கியுள்ளது.

17—5—1972 அன்று சலவைத் துறை கட்ட ஒப்ப அறிவிப்பு செய்யப்பட்டும் ஒப்பந்தக்காரர் எவரும் முன்வராததால் மறு ஒப்ப அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு கடைசி நாள் 24-7-72.

Kallar Reclamation Scheme.

*204. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have constituted any Special Department for Kallar Reclamation in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.